RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s48

OPEN ACCESS

# கு. அழகிரிசாமி படைப்பு வழி கரிசல் மனம்

செ. மேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை-600059, தமிழ்நாடு, இந்தியா.

# Karisal Mind Through K. Alagirisamy's Creations

S. Marry [a, *]

[a] Department of Tamil, Madras Christian College, Tambaram, Chennai-600059, Tamil Nadu, India

* Corresponding Author: smarry@mcc.edu.in

Received: 20-04-2022
Revised: 25-04-2022
Accepted: 02-05-2022
Published: 09-07-2022

Check for updates

## ABSTRACT

It could be said that the role of Karisal literature in literary development is immeasurable. Because Karisal soil has produced many writers. One-third (35) of the 105 stories written by K. Alagirisamy, who can be said to be the harbinger of Karisal in particular, reflect the life of the Karisal land. The story of 'Kumarapura Station' displays the people living in the Karisal area as realistic people, and the way they live their lives, regardless of their ups and downs, through the scenes where the station master and the uneducated hotelier sit down equally to each other and converse. In the story 'Raja has come', he brilliantly illustrates the lives of children in the Karisal area living in poverty without giving up themselves. And those who have money do not mind. One who has the mind has no money. He exhibits this situation. We hope that the gift items will appeal to everyone, especially children, and that the child's nature will speak to us again and again, no matter what we scold. But he denies them and points out through the 'gift' story that children do have pride and we need to understand them. He describes the state of suffering as a result of not having access to water because the livelihood of soil depends on rain, and the plight of walking many miles beyond even the most basic necessities. He beautifully points out that the people of Karisal love the soil and want to die on that soil, regardless of the difficulties they face. The Karisal region often has an unpredictable economic environment in the absence of the monsoon. K. Alagirisamy subtly expresses in his stories the difficulties that people face in leading their lives in an environment of poverty and the joy and emotional struggles that appear from time to time

**Keywords:** K. Alagirisamy, Creations, Karisal, Mind, Karisal Literature

## முன்னுரை

ஒரு இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளர் தன்னுடைய வாழ்க்கையில் பார்த்து அனுபவித்து உணர்ந்த செய்திகளை இலக்கியமாகப் படைக்கிறான். அந்த வகையில் கு. அழகிரிசாமி கரிசல் மண்ணில் பிறந்து, கரிசல் காடுகளில் வளர்ந்து, கரிசல் உணவை உட்கொண்டு கரிசல் மக்களோடு தன் வாழ்க்கையை வாழ்ந்து தான் பெற்ற அனுபவங்களை இலக்கியமாக படைத்துள்ளார். அவ்விலக்கியங்களைப் படித்து பார்க்கும்பொழுது பெரும்பான்மையான கதைகள் கரிசல் மனத்தைப் பிரதிபலிப்பதாகவேயுள்ளது என்பதை நிறுவுவது இக்கட்டுரையின் நோக்கமாகும். கரிசல் மக்களுக்கு உழவுத் தொழிலே முதன்மை வாழ்வாதாரம். அதிக வெப்பம் நிறைந்த கடல் பகுதி. மழையை நம்பியே உழவுத் தொழில் செய்யப்படும். கந்தகம் நிறைந்த நிலப் பகுதியாக இருப்பதனால் பட்டாசு தொழிற்சாலைகள் இங்கு நிறைந்துள்ளன. அவ்வப்போது பொய்த்துப் போகும் பருவமழையால், கரிசல்

நிலம் பெரும்பாலும் வறுமை கோலம் பூண்டிருக்கும். மக்கள் தங்கள் அன்றாட உணவிற்கே அவதியுறும் நிலை இங்கு இயல்பான ஒன்றாகும். வறட்சியான மண்ணாக இருந்தாலும் மக்களுக்கு கொடுக்க வேண்டிய நன்மையை அந்த மண் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த மண்ணில் பிறந்த அழகிரிசாமி தன்னுடைய படைப்பில் கரிசல் மனத்தை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

## கு. அழகிரிசாமியும் கரிசல் நிலமும்

கு. அழகிரிசாமி 23.9.1923 இல் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டாரத்திலுள்ள இடைசெவல் என்னும் கிராமத்தில் குருசாமிக்கும் தாய்யம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். இயற்பெயர் அழகிரிசாமி என்றாலும் ஊராராலும், வீட்டாராலும் செல்லையா என்றே அழைக்கப்பட்டார். இடைச்செவல் கரிசல் நிலப்பகுதியாதலால் பெரும்பாலும் பருவமழையின்றி சீரற்ற பொருளாதாரச் சூழலைக் கொண்டிருக்கும். வறுமையான சூழலிலும் அவ்வூர் மக்கள், வாழ்க்கையை நடத்துவதில் எதிர்கொள்ளும் சாமர்த்தியத்தையும் அவ்வப்போது தோன்றும் மகிழ்ச்சியையும் மண்ணின் மனத்தையும் கு. அழகிரிசாமி தம் கதைகளில் காட்டுகிறார். "கரிசல்மக்களைப் பற்றி எழுதும் போதெல்லாம் அழகிரிசாமி அம்மக்களிடம் தன்னை முற்றாகப் பறிகொடுத்த தன்வசம் இழுந்த மாபெரும் கலைஞனாக மாறிவிடுகிறார். எனும் சு. வேணுகோபாலின் கருத்து தம் கதைகளில் கரிசல் நிலத்திற்கு அளித்த இடத்தினை உணர்த்துகிறது (Alagirisami, 2019). அவர் கரிசல் நிலத்தின் வாழ்வியலையும் பண்பாட்டையும் தம் கதைகளில் பல கூறுகளின் வழி சித்தரித்துள்ளார்.

## 'குமாரபுரம் ஸ்டேஷன்'

மண்ணை, மனிதனை நேசிப்பது போலவே மற்றவர்களையும் மனப்பூர்வமாகவும், கலைநோக்கோடும் நேசித்தார் என்பதற்கு நல்ல அடையாளமாக அமைந்துள்ளது. 'குமாரபுரம் ஸ்டேஷன்' என்ற கதை,

நாட்டில் ஆயிரமாயிரம் ரயில்வே ஸ்டேஷன்கள் இருந்தபோதிலும் கு. அழகிரிசாமி முதன் முதலாகப் பார்த்த ரயில்வே ஸ்டேஷன் என்பதாலும் அவர் பிறந்த கிராமத்து சிறுவர்கள் பட்டணத்தில் படிக்க போவதற்குப் பயன்படுத்திய ரயில்வே ஸ்டேஷன் என்பதாலும் 'குமாரபுரம் ஸ்டேஷன்' பெயரில் கவர்ச்சியும் காதலும் உண்டாகி காலத்தால் அந்த ஸ்டேஷனே கதைக்கு கருவாகவும் அமைத்து விட்டார்.

நடுக்காட்டில் அமைந்திருந்த 'குமாரபுரம் ஸ்டேஷன்' அதை ஒட்டி சில வீடுகளும் அழகையும் அமைதியையும் ஆடையாக அணிந்திருந்தன. அங்கு தான் ஸ்டேஷன் மாஸ்டர் குடியிருந்தார். என கு. அழகிரிசாமி எழுதியது கரிசல் கிராம சூழலை நம் மனக்கண்முன் கொண்டு வருகின்றன. 'குமாரபுரம் ஸ்டேஷன்', ஸ்டேஷன் மாஸ்டர், தலைமையாசிரியர், ஹோட்டல் முதலாளி, பள்ளிச் சிறுவர்கள், போர்ட்டர்கள் ஆகியோரிடையே நெருக்கத்தையும் நேசத்தையும் வளர்த்து ஊர் செய்தி முதற்கொண்டு உலகச் செய்திகள் அனைத்தையும் பேசுவதற்கு உதவிபுரிகிறது.

"கிராமத்து ஹெட்மாஸ்டரையும், ஓட்டல் முதலாளியையும், போர்ட்டரையும் விட பெரிய வாத்தியார்கள் இருக்க முடியுமா? அவர்களிடம் படிக்காத படிப்பையா, இந்தச் சிறுவர்கள் இனிமேல் படிக்கப் போகிறார்கள். என்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் தலைமையாசிரியர் கூறுகிறார் (Paramasivam, 2007).

கரிசல் மக்களிடம் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதைச் சாதாரண ஓட்டல் முதலாளி, ஹெட்மாஸ்டர், ஸ்டேஷன் மாஸ்டர் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து பேசுவதிலிருந்து பார்க்கமுடிகிறது.

"இந்தப் பாலை வனத்திலும் இப்பேர்ப்பட்ட ஒரு நறுமணம்! இம்மாதிரியான ஒரு இளங்காற்று! பார்த்தால் ஒரே கருப்பு மண்ணாக இருக்கிறது. இங்கே இப்படிச் சில மரங்கள் முளைத்து இப்படி ஒரு திவ்யமான வாசனையைக் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது. இந்த வாசனைக் கூட இந்த மண்ணில்தான் உற்பத்தியாகி யிருக்கிறது. இந்தக் கரிசல் மண்ணிலிருந்து மனமும் கிடைக்கிறது.

உயிரும் கிடைக்கிறது (Paramasivam, 2007). என்று 'குமாரபுரம் ஸ்டேஷன்' அமைந்துள்ள இயற்கை சூழலை கரிசல் மண் வாசனையைச் சித்தரிக்கும்போது கு. அழகிரிசாமி மண்ணிலிருந்து மனமும் கிடைக்கிறது. உயிரும் கிடைக்கிறது. என்று சொல்வதின் மூலம் கு. அழகிரிசாமிக்கு 'குமாரபுரம் ஸ்டேஷன்' எப்படியெல்லாம் காட்சியளித்து கருவாகி அந்தக் கலைஞனின் உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டது என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை.

## 'ராஜா வந்திருக்கிறார்'

கரிசல் நிலத்தில் வாழும் குழந்தைகள் வறுமை நிலையில் இருந்தாலும் அந்த சூழ்நிலையிலும் அவர்கள் சமாளித்துக் கொண்டு வாழ்கிறார்கள். என்பதையும் மேல்தட்டு மக்களின் வர்க்க முரண்பாடுகளையும் இக்கதையின் வழியாகப் பார்க்கலாம். இக்கதையில் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனுக்கும், வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன்- சிறுமி ஆகிய மூவருக்கும் இடையே படப்போட்டியில் ஆரம்பமாகும் கதை.

"உங்க வீட்டில் இது இருக்கிறதா? அது இருக்கிறதா? என்று பணக்காரக் குழந்தை பெருமையோடு கேட்பது போலவே, ஏழைக் குழந்தைகளும் உங்கள் வீட்டில் இது இருக்கிறதா? அது இருக்கிறதா? என்று கேட்கத் தவறவில்லை (Paramasivam, 2007).

தீபாவளித் தினத்தன்று பணக்கார வீட்டுக்கு அந்த வீட்டு மாப்பிள்ளை வருகிறார். அவரை அந்த வீட்டார் ராஜாவாகவே மதிப்பவர்கள். அதனாலேயே பணக்காரக் குழந்தை எங்கள் வீட்டுக்கு ராஜா வந்திருக்கிறார்? உங்க வீட்டுக்கு வந்திருக்கிறாரா? என்று கேட்ட போது ஏழை வீட்டுக் குழந்தையும் தயங்காமல் பட்டென்று பதில் தருகிறது. எங்க வீட்டுக்கும் ராஜா வந்திருக்கிறார். என்று அந்த ராஜா யார் தெரியுமா? ராஜா என்ற பெயரை உடைய அனாதை சிறுவன் ஒருவன் தான்.

கரிசல் நிலத்தில் வாழ்ந்ததால் கரிசல் நில குழந்தைகளின் உணர்வுகளைப் புரிந்து சின்னஞ்சிறுசுகளைச் சுதந்திரமாகப் பேச வைத்து அதில் வெளிப்படும் வர்க்க முரண்பாடுகளை நயமாகச் சித்தரித்து சமத்துவச் சமுதாயத்தில் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்னும் கருத்தை வலியுறுத்துகிறார்.

## அன்பளிப்பு

கரிசல் மண்ணை நேசித்தது போலவே குழந்தைகளையும் நேசித்தார். நேசித்தது மட்டுமல்லாமல் தன்னைப் போலவே புத்தகம் படிக்கும் பழக்கத்தைக் குழந்தைகளுக்கு ஊட்டினார். என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது 'அன்பளிப்பு' என்ற கதை

இரண்டு குழந்தைகளுக்குப் படிப்பதற்குப் புத்தகங்களையும், நாட்குறிப்பையும் அன்பளிப்பாகக் கொடுப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன். இளைஞன் தன்னை அலட்சியமும் அவமானப்படுத்தி விட்டதாகக் கருதி தன் செலவில் நாட்குறிப்பு ஒன்றை வாங்கி வந்து அந்த இளைஞனிடம் கொடுத்து அன்பளிப்பு என்று எழுதி கொள்ளும்படி கேட்கிறான். 'அன்பளிப்பு' என்ற இக்கதையில் அன்பளிப்பைப் பெறுவதில் இயல்பாகவே குழந்தைகளுக்கு ஆசை உண்டு என்பதையும் அதே நேரத்தில் சுயமரியாதையும் உண்டு என்பதையும் உணர்த்துகிறது.

"எல்லோருமாகச் சேர்ந்து ஒருமிக்க என்ன புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.

ஒரு புத்தகமும் கொண்டு வரவில்லை.

பொய் பொய் சும்மா சொல்கிறீர்கள்

நிஜமாக ஒரு புத்தகம் கொண்டு வரவில்லை

பிருந்தா! மாமா பொய் சொல்கிறார்.

கொண்டு வந்து எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பார் வாருங்கள் தேடிப் பார்க்கலாம் என்றாள் (Chitra, 2015). என்று கூறுவதிலிருந்து குழந்தைகளுக்கு புத்தகத்தின் மீது இருந்த ஆர்வத்தைப் பார்க்க முடிகிறது. மனிதன் முன்னேற வேண்டுமென்றால் புத்தகம் வாசிக்க வேண்டும் என்பதையும். தன்னுடைய முன்னேற்றத்திற்கு புத்தகம் காரணமாக இருந்தது என்பதையும் நன்குயுணர்ந்தக் கரிசல் எழுத்தாளரான கு. அழகிரிசாமி 'அன்பளிப்பு' கதையின் வழியாகக் குழந்தையின் முன்னேற்றத்திற்கு புத்தகத்தைக் கொடுத்து வாசிக்க வைத்தார். என்பதைத் தெளிவாகப் பார்க்கமுடிகிறது.

## முடிவுரை

கரிசல் பூமியைப் பெரிதும் நேசித்த கு. அழகிரிசாமி அதனைத் தம் கதைகளில் புலப்படுத்துகிறார். குறிப்பாகக் 'குமாரபுரம் ஸ்டேஷன்' 'ராஜா வந்திருக்கிறார்' 'அன்பளிப்பு' ஆகிய படைப்புகளின் வழியே கரிசல் மண்ணின் மனத்தைப் பதிவுசெய்கிறார். கரிசல் மக்கள் செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடு இல்லாமல், படித்தவன், படிக்காதவன் என்ற நிலைப்பாடு இல்லாத மக்களாய் வாழ்கிறார்கள் என்பதைக் 'குமாரபுரம் ஸ்டேஷன்' கதையின் வாயிலாக் காட்டுகிறார். கரிசல் மக்களிடம் இரக்கம் உள்ளது. என்பதை ஒரு சிறு குழந்தை தங்க இடமில்லாமல் அலையும்போது அக்குழந்தையைத் தன் குழந்தை போல பாவித்து தன்னுடையக் குழந்தைக்கு எடுத்த புது துணியை அக்குழந்தைக்கு அணிந்து ஒரு ஏழைத்தாய் மகிழ்கிறாள். அதே ஊரில் வசதியாயிருக்கும் பண்ணையார் அக்குழந்தையை விரட்டி யடிக்கிறார் எனும் காட்சியைக் காட்சிப்படுத்துவதின் மூலம் வசதியிருந்தும் நெஞ்சில் ஈரம் இல்லை என்பதை 'ராஜா வந்திருக்கிறார்' கதையின் வாயிலாக விளக்குகிறார். குழந்தைக்கான உலகம் ஒன்று உள்ளது அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்கிறார். சின்னப் பிள்ளைகள் நாம் என்ன சொன்னாலும் அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று பெரியோர்கள் நினைப்பது தவறான ஒன்றாகும் என்பதை 'அன்பளிப்பு' கதையில் வெளிப்படுத்தி காட்டுகிறார். மொத்தத்தில் கரிசல் நில மக்கள் பெரும்பான்மையோர் சூழ்ச்சி, வஞ்சனை இல்லாதப் பெரியோரும், சிறியோரும் வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

## References

Alagirisami, K., (2019) Ku. Alagiriswamy Sirukathaikal, kalasuvadu pathippagam, Nagercoil, India.

Chitra, (2015) Kurunji, Madras Christian College, Chennai, India.

Paramasivam, M., (2007) Alagiriswamy Ilakkiyattatam, Kavya Veeliyedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License